# விடையறியா காலங்கள்



1 சாமுவேல் 24 ஆம் அதிகாரத்தில் தாவீது சவுலுக்கு தப்பி ஓடிக்கொண்டிருக்கும் வேளையில், அவர் என்கேதியின் வனாந்தரத்தில் இருப்பதை அறிந்து **(1 சாமு 24:1)** சவுல் தாவீதை பிடிக்க தன் படையோடு நெருங்குகையில், தாவீதிடம் தனியாக ஒரு குகையில் சவுல் அகப்பட்ட நிலையிலும், தாவீதோடு இருந்தவர்கள் இதுதான் சரியான நேரம் சவுலை கொன்று உன் பிரச்சனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வை என்று கூறியபோதும், நான் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்ட சவுலின் மீது என் கையை போட மாட்டேன், கர்த்தரே அவருக்கு என்றைக்கு முடிவுண்டாக்குகிறாரோ, அன்று அவர் வாழ்க்கை முடியட்டும். ஆனால் என் பிரச்சனை தீர வேண்டும் என்பதற்காக, நான் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் மேல் என் கையை போட மாட்டேன் என்றார். தாவீதிற்க்கு நன்றாய் தெரியும் சவுலுக்குப் பிறகுதான், தான் ராஜாவாக முடியும் என்று. எனவே தான் இங்கு சவுலை கொல்லாமல் விடுவது, தன்னுடைய பிரச்சனையை தொடரச் செய்யுமே யன்றி, தானும் சாமுவேலினால் பெற்ற ராஜ அபிஷேகத்தை நிறைவேற்ற காலம் செல்லுமேயன்றி, மற்றபடி நிலையில்லா எதிர்காலத்தையே தொடர நேரிடும். ஆனாலும் தாவீது அதற்கு ஆயத்தமாய் இருந்தார். ஒருநாள் ஆண்டவர் அவரை ராஜாவாக மாற்றினார். இங்கு நாம் தியானிக்க இருக்கும் காரியம், நிச்சயமாக ஆண்டவர் ஒருநாள் நம் பிரச்சனைகளுக்கு எல்லாம் முடி உண்டாக்குவார், அவர் நேரம் வரும் பொழுது அந்த பிரச்சனை காணாமல் போய்விடும். எனவே இதில் நமக்கு எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் பிரச்சனை இடையே நாம் கடந்து சென்ற காலங்களை நாம் திரும்பிப் பார்க்கும் பொழுது, ஒருவேளை அந்த பிரச்சனைகள் எல்லாம், வியாதிகள் எல்லாம், வேதனைகள் எல்லாம், இழப்புகள் எல்லாம், வராதிருந்ததானால் இன்னும் வாழ்க்கையில் ஆண்டவருக்காக நிறைய சாதித்து இருக்கலாமே என்பதுதான்.

ஆம் தாவீது தன் இளமை காலத்தில் சாமுவேலினால் அபிஷேகம் பெற்று, கோலியாத்தை கொன்று, சவுலின் மகளாகிய மிகாளை மணந்து, கர்த்தருடைய சித்தப்படியே ஆண்டவருடைய யுத்தங்களை நடத்தி வந்த வேளையில், பெலிஸ்தியரால் அல்ல, தான் ராஜாவாக போகும் தன் சொந்த இஸ்ரவேல் நாட்டு படையினராலேயே, பல வருடங்கள் வேட்டையாடப்பட்டார். தன்னுடைய இளமை காலத்தில் தன் குடும்பத்தோடு இருக்க முடியாமல், அமைதியான ஒரு வாழ்க்கை வாழ முடியாமல், பயந்து பயந்து, ஓடி ஓடி, வாழ வேண்டியிருந்தது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தன் எதிரி நாடாகிய பெலிஸ்தியரிடமே தஞ்சம் புக வேண்டி வந்தது **(1 சாமு 27:1)**. இதனால் அவர் தன் தனிப்பட்ட வாழ்வில்

இழந்த சந்தோஷமான இளமை காலங்கள் அதிகம், அதை காட்டிலும் ஒரு வேளை இப்படிப்பட்ட பிரச்சனை உருவாகாமல், சவுல் நல்ல புத்தியோடு இருந்திருந்தால், தாவீது பல வெற்றிகளை இஸ்ரவேலுக்கு தந்திருப்பார். சவுலும், யோனத்தானும் போரில் மரித்திருக்கமாட்டார்கள். ஆனால் இவை எதுவுமே நடக்கவில்லை.

இதையே நாம் பவுலின் ஊழிய காலத்திலும் காண்கிறோம் அவர் ஒவ்வொரு பட்டணத்திற்கு சென்று ஆண்டவருடைய சுவிசேஷத்தை அறிவித்த போதெல்லாம், அவர் பல நாட்கள் சிறைச்சாலையில் வேதனைப்பட வேண்டியிருந்தது. சிறைச்சாலையில் மாத்திரமல்ல தான் எவ்வாறெல்லாம் வேதனைகளை அனுபவித்தேன் என்பதை **2 கொ 11-23-28** வசனங்களில் "**நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது**." பவுலே பட்டியலிடுகிறார். ஒவ்வொரு முறையும் அவர் வாறினால் அடிக்கப்படும் பொழுதும், கல்லெறியப்படும் பொழுதும், தாக்கப்படும் பொழுதும் அந்தக் காயங்கள் ஆற அவர் தன் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் எத்தனை நாள் வேதனை அனுபவித்திருப்பார் என்பது நமக்கு தெரியாது. ஆனால் அதன் மத்தியிலும், அவர் தன் ஓட்டத்தை வெற்றியோடு ஓடி முடித்தார். ஆனால் ஒருவேளை இப்படிப்பட்ட கொடிய காலங்கள், சிறைவாசம், அடிகள், கப்பற்சேதங்கள் போன்றவை நடவாது இருந்திருந்தால், பவுல் இன்னும் பலருக்கு ஊழியம் செய்து இருக்க முடியும், இன்னும் ஒருவேளை அதிக நிருபங்கள் எழுதியிருக்க முடியும். அதற்கு காலம் இல்லாமல் போயிற்று.

இன்று வரை எத்தனையோ தேவ பிள்ளைகள், ஊழியர்கள், தங்கள் வாழ்வில் கடந்து செல்லும் கடினமான சூழ்நிலைகள் அவர்களை ஆண்டவருக்குள் பக்குவப்படுத்துகிறது. முடிவில் ஆண்டவர் மகிமையான விடுதலையையும் தருகிறார். ஆனால் அவர்கள் அந்த கடினமான சூழ்நிலை ஊடாகச் செல்லும் பொழுது, குறிப்பாக ஊழியர்கள் வியாதி படுக்கையில் கடந்த செல்கையில், வியாதி நிமித்தம் ஊழியம் செய்ய முடியாமல், சபையை கவனிக்க முடியாமல், தனிப்பட்ட முறையில் கூட ஜெபிக்க, உபவாசிக்க முடியாமல், வியாதியினால் வேதனை அனுபவிக்கும் பொழுது, சபையில் நின்று வாரம் தவறாமல் தன் சபை மக்களுக்கு சத்திய வார்த்தையை போதிக்கும் மேய்ப்பர், வியாதியின் நிமித்தம் வீட்டிலோ, மருத்துவமனையிலோ இருக்கும்பொழுது, ஒருவேளை இது அவருக்கு நேரிடாமல் இருந்திருந்தால், இன்னும் அதிகமாக ஆண்டவருக்கு ஊழியம் செய்திருப்பார் என்று நாம் எண்ணலாம். ஊழியர் மாத்திரமல்ல, ஊழியரின் குடும்பமும் ஊழிய பாதையில் முன்னேறிச் செல்ல முடியாமல், வியாதியின் வேதனையில் இருக்கும் ஊழியரை கவனிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்தியாவிற்கு வந்து ஊழியம் செய்த வில்லியம் கேரி அவர்கள் மிகப்பெரிய பணிகளை ஆண்டவருக்கு என்று செய்தார், ஆனால் அதே நேரத்தில் அவர் வாழ்வில் எத்தனை இன்னல்களை சந்தித்தார், எத்தனை இழப்புகளை சந்தித்தார், என்பதை வரலாறு கூறுகிறது. ஒருவேளை அவர்

இப்படிப்பட்ட வேதனைகளை சந்திக்காமல் இருந்திருந்தால், இன்னும் ஆண்டவருக்கு என்று பல காரியங்களை செய்திருக்க முடியுமே என்று எண்ண தோன்றுகிறது. சமீபத்தில் காலமான அருமையான ஊழியர் ஐயா ராபின்சன் அவர்களின் மனைவி திருமதி.கிறிஸ்டினா ராபின்சன் அவர்களின் மரணமும் இக்கேள்வியையே எழுப்புகிறது. ஒருவேளை இது நடவாமல் இருந்திருந்தால், இன்னும் குடும்பமாய் நன்றாக ஊழியம் செய்திருக்கலாமே, இப்படிப்பட்ட மரணம், ஆவிக்குரிய ரீதியிலும், சரீர ரீதியிலும், அந்த குடும்பத்திற்கு இழப்பை அல்லவோ கொண்டு வந்திருக்கிறது.

நமக்கு தெரிந்திருக்கிற ஊழியர்கள் மாத்திரமல்ல, இன்னும் எத்தனையோ தேவ பிள்ளைகளின் வாழ்வில், நாம் சமுதாயத்தில் சந்திக்கின்ற மக்களின் வாழ்வில் நடக்கும் காரியங்கள், ஏன் நம் சொந்த வாழ்வில் நாம் கடந்து செல்லும் கடினமான காரியங்கள், காலங்கள், ஒருவேளை நமக்கு அது வராது இருந்தால், நாம் இன்னும் ஆண்டவருக்காக ஓடலாமே என்று எண்ண தோன்றும். ஆம் ஊழிய பாதையில் விரிவடைய முடியாமல், சத்தியத்தை கொண்டு செல்ல முடியாமல், பல காலங்களாக போராடிக் கொண்டிருக்கும் ஊழியர்கள் உண்டு. குடும்பத்தின் மத்தியில் ஆண்டவருக்கு சாட்சியாக வாழ்ந்தாலும், குடும்பத்தில் உள்ளவர் செய்யும் சாட்சி இல்லா செயல்கள், அக்கிரம செயல்கள், இத்தனை காலம் தியாகமாய் குடும்பத்திற்காக வாழ்ந்தும் ஒரு பிரயோஜனமும் இல்லையே என்று எண்ணத் தோன்றுகிறது. இவை எல்லாம் விடையறியா காலங்களாய் நம் முன் நிற்கிறது. ஒன்றை நாம் அறிந்திருக்கிறோம் எப்படிப்பட்ட கொடிய சூழ்நிலை நடுவே நாம் கடந்து சென்றாலும், நாம் எடுத்த முயற்சிகள் பலன் தந்தாலும், பலன் தராமல் போனாலும் ஆண்டவர் நம்மை நிச்சயமாய் நித்திய ஜீவக்கரையில் சேர்ப்பார் என்பது. ஆனால் நாம் எதுவும் செய்ய முடியாமல், அல்லது முயன்றும் பிரயோஜனம் இல்லாமல் போன காலங்கள், காரியங்களின் விடை நாம் அறியாதவை. அவை ஆண்டவர் ஒருவருக்கு மட்டுமே தெரியும். பயந்து பயந்து, ஓடின காலங்கள் ஏன், ஊழியம் செய்ய வேண்டிய நாட்களில், அடியும் உதையும் பட்டு சிறையில் ஏன் இருக்க நேரிட்டது, எத்தனையோ அக்கிரமம் செய்வோர் கூட, எந்த பிரச்சினையும் இன்றி தங்கள் அக்கிரம செயல்களை தொடர்ந்து செய்யும் பொழுது, ஆண்டவருக்கு ஓட முடியாமல், தடைகளும் வேதனைகளும் வியாதிகளும் உண்டானது ஏன், அதை ஆண்டவர் மட்டுமே அறிவார். நாம் செய்ய வேண்டியதெல்லாம், ஆண்டவரே எல்லாம் சரியானபடி நடக்கின்ற காலங்கள் மட்டுமின்றி, ஏன் இப்படி நடக்கிறது என்று விடையறியா காலங்களிலும், ஆண்டவர் நம்மோடு இருக்கிறார் என்பதையும், ஒருவேளை நாம் சில காரியங்களை இழந்தது போல் தோன்றினாலும், ஆண்டவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார், என்ற நிச்சயம் மாத்திரம் நமக்கு போதும், நமக்கு விடை தெரியாவிட்டாலும், பாதை தெரியாவிட்டாலும், நாம் ஆண்டவரின் கரத்தில் மாத்திரம் இருக்கிறோம் என்பதை நிச்சயப்படுத்தி கொள்வோமாக, ஆமென், அல்லேலூயா.